தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

மாசி 2001 இதழ் 23

"நம்மடை போராட்டத்த பயங்கரவாதம் எண்டு சொல்லிட்டா பேச்சுக்கு வரப்போறாங்க...? பாப்பமே"

-சனத்தின் குரல்-

# எது பயங்கரவாதம் ?? யார் பயங்கரவாதிகள் ???




இப்பத்திரிகை உங்கள் கைகளை வந்தடையும்போது, பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தினால் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டிருக்கலாம், தடைசெய்யப்படாமலும் இருக்கலாம். எனினும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரையில், அதற்கு ஏகாதிபத்தியக் கூட்டு எப்போதோ தடைவிதித்து விட்டது என்பதே உண்மை.

மேற்குலக வெள்ளைப் பயங்கரவாதமும், ஆசியாவின் இந்திய மேலாதிக்கப் பயங்கரவாதமும் கூட்டமைத்து நமது விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்கின்றன. அவர்கள் நம் மீது பயங்கரவாதத்தின் பல்வேறு வடிவங்களையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் கட்டவிழ்த்துவிட்ட போது, அவற்றை வெளிப்படையாக அம்பலப்படுத்தத் தவறியதன் விளைவு, எதிரிகளின் முகாம் முந்திக்கொண்டு நமது விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்கின்றது.

பூர்வீக குடிகளையும், ஆசிய, ஆபிரிக்க மக்களையும் அடிமைப்பத்திக், கொடுமைப்படுத்தின வெள்ளைக் கொலனித்துவப் பயங்கரவாதம். சுதேசிகளின் இயல்பான உற்பத்தி முறைகளை சிதைத்து, வளங்களைக் கொள்ளையிட்டனர். அடிமைப்படுத்தப்பட்ட மக்களின் உழைப்பை உறிஞ்சிக் குடித்தனர். எமது வளங்களைத் தின்று கொழுத்த திமிரில் சித்திரவதைக் கருவிகளை படைத்து விற்பனை செய்து மனிதரைக் கொண்டே மனிதரைப் பரிசோதனை செய்விக்கின்றனர். நாடுகளை மோதவிட்டு பலவீனப்படுத்தி தன்காலடிக்குக் கொண்டு வர சதித்திட்டமிடுகின்றனர்.

ஒரு இலட்சம் குழந்தைகளை ஈராக்கில் கொன்று குவித்து விட்டு, அதனை மறைக்க எண்ணையில் சிக்கிய ஒரு பறவையைக் காட்டி ஒவ்வொரு நாளும் பிரச்சாரம் செய்தனர். இது தொடர்பூடகப் பயங்கரவாதம். தமக்குப்பிடிக்காத ஆட்சிகளை கவிழ்ப்பது பயங்கரவாதம், தமக்கு பிடித்த ஆட்சிகளின் பயங்கரவாதத்தை பாதுகாத்துப் பேணுவது பயங்கரவாதம். தமது விஞ்ஞான கண்டுபிடிப்புகளையும் மருந்துகளையும் ஆபிரிக்க ஆசிய

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

## ஆண் பாசிசத்தை பாதுகாக்கும் பெண் ஜனாதிபதிக்கு. .

பெண் ஜனாதிபதியே! உங்களது இனவெறி அழித்துதொழிப்புகளுக்கு அப்பால், தமிழீழத்துப் பெண்கள் மீது வன்கொடுமை புரியும் உங்களின் ஆண் பாசிசப் படைகளை தண்டிக்கவும், கட்டுப்படுத்தவும் உங்களால் முடியாது போய்விட்டதா? அல்லது உங்களின் இனவெறி அபிலாஷைகளைஇந்தப் படைகள் பூர்த்தி செய்வதால் அவர்களுக்கான சலுகையாக, தமிழீழ பெண்களான எம்மீதான ஆணாதிக்க வெறித்தனத்தை அங்கீகரித்துக் கொண்டிருக்கிறீர்களா?

கடந்த ஒரு மாதத்திற்குள் வடதமிழீழத்திலும் தென்தமிழீழத்திலுமாக இரண்டு பெண்கள், தங்களின் இனவெறிப் படையினால் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். உலகின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட இவ்விரு சம்பவங்களுடன், படைகளின் மீதான அச்சத்தினாலும் சமூகக் காரணங்களாலும் வெளிப்படுத்தப்படாதிருக்கும் பெண்கள் மீதான அத்துமீறல்களையும் வன்முறைகளையும் உள்ளடக்குவோமானால், உங்களது சிங்களப் படைகளின் ஆணாதிக்கப் பயங்கரம் எங்கள் மண்ணில் கட்டுப்படுத்தப்படாத, தட்டிக்கேட்கப்படும் நிலையைக் கடந்துவிட்ட தொன்றாக விஸ்வரூபமெடுத்து வருகிறது.

அம்மணி! பெண் எனும் போர்வைக்குள், உலக பெண்களின் கரிசனையை உங்கள் பக்கம் ஈர்த்துக்கொண்டு மறுபுறம் தமிழீழப் பெண்களை சிதைத்துவரும் படைகளை காப்பாற்றிவரும் நீங்கள்தான் உண்மையான பயங்கரவாதி.

ஆம்! தமிழீழப் பெண்களான நாம் கூறுகிறோம்... நீங்கள் தான் இதற்கெல்லாம் பதில்சொல்லியாக வேண்டும். உங்களுக்குரிய தண்டனையை உங்களது படைகளுடன் சேர்ந்து நீங்கள் அனுபவிக்கத்தான் போகிறீர்கள். . .!

## சந்திரிகாவின் சுதந்திரதின பேருரை!



ஒவ்வொரு முக்கிய நிகழ்வின் போதும் சந்திரிகா, தான் சிங்கள தேசத்தின் அரசுத் தலைவர் என்பதை சந்தேகத்திற் கிடமின்றி நிருபித்து வருகின்றார். அண்மைய பெப்ரவரி 4ம் திகதி பேச்சும் அப்படிப்பட்டதே. முன்னுக்குப்பின் முரணாகவும், புரட்டுகள் நிறைந்ததாகவும், இனவெறி, யுத்தவெறி மிக்கதாகவும் அப்பேச்சு அமைந்திருந்தது. அப்படியிருக்கும் போது, விடுதலைப்புலிகள் சமாதான முயற்சிக்கு அறிகுறிகளை காட்டியுள்ளனர். இந்த வாய்ப்பினைத் தவறவிடக்கூடாது என அவரால், ஒப்புக்குக் கூறிய ஒரு வாக்கியமானது சில தரப்பினரால் சிலாகிக்கப்பட்டு வருகின்றது.

இந்த ஒரு வாக்கியம் தவிர, மற்ற எல்லாமே தமிழ் தேசியப்பிரச்சனை மற்றும் தேசிய விடுதலை இயக்கம் என்பவற்றை நிராகரித்து விடுவதாகவும், சிங்கள மக்களுக்கு ஒரு பொய்யான சித்திரத்தை தருவதாகவுமே அப்பேச்சு அமைந்திருந்தது. நாடு முன்னேற்றப்பாதையில் வீறுநடைபோடுவதாக பகர்கின்றார். அதேசமயம் ஆபத்தான எதிர்காலத்தைக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கின்றார். வழமைபோலவே முன்னுக்குப்பின் முரணான வித்திலும், வெறும் சொல்லலங்காரம் நிறைந்ததாயும் அவரது உரை அமைந்திருந்தது.

சந்திரிகாவின் சுதந்திர தினப்பேச்சு, நமது தேசியத்தை மறுக்கின்றது. 94 இல் தேசியப்பிரச்சனை உள்ளது என தந்திரோபாயமாக ஒப்புக்கேனும் ஒப்புக்கொண்ட சந்திரிகா அரசு தற்போது வெளிப்படையாக நமது தேசியத்தை நிராகரித்துள்ளது. தான் பேச்சுவாத்தை நடாத்த வேண்டிய ஒரு தீர்மானகரமான சக்தியை இன்னமும் பயங்கரவாதிகள் எனச் சொல்லிக் கொண்டிருக்கின்றது. பேச்சுவார்த்தைக்குச் சாதகமான ஒளிக்கீற்று தெரிவதாக சந்திரிகா கூறிய ஒரு வார்த்தையை, அந்நிய உதவியை பெறுதவற்காக இப்படியாக கூறிய ஒரு வார்த்தையை வைத்துக்கொண்டு, சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தைக்காக தயாராவதாக கற்பனை செய்ய நமது மக்கள் ஒன்றும் அரசியல் அப்பாவிகள் அல்ல.

# தற்செயலுக்குள்ளும் ஒரு இயங்குவிதி !

தந்தை தொடக்கி வைக்க,

தாய் வடிவம் கொடுக்க,

மகள் முடித்து வைக்கின்றார்:

தற்செயலுக்குள்ளும் ஒரு இயங்குவிதி

தமிழீழ விடுதலைப் போராட்டமானது சந்திரிகா பண்டார நாயக்க வின் ஆட்சிக் காலத்தில் அதன் பிரதான கட்டத்தை நிறைவு செய்யும் என்பது தெளிவாகி விட்டது. தமிழ் தேசத்திற்கென ஒரு தனியான தேச அரசு உருவாகும் எனும் வரலாற்று விதியினை இக்கட்டம் உறுதி செய்கின்றது. இதனைத் தர்க்க ரீதியில் கோடிட்டுக் காட்டுவது இக்காலகட்டத்தில் மிகவும் பொருத்தமானதாகும்.

அரசியலிலும் இராஜதந்திரத்திலும் ஆழ்ந்த புலமை கொண்டதாக கூறப்படும் SWRD பண்டாரநாயக்க 1920 களின் தொடக்கத்தில் இத்தீவிற்கு மூன்று சமஷ்டிகளைக் கொண்ட ஒரு கூட்டாட்சி முறை பொருத்தமானதென முன்மொழிந்தார். முன்மொழிவு என்ற வகையில் இது மிகவும் தூர திருஷ்டியான விடயமே. ஆனால் அவர் ஆட்சித் தலைமையை ஏற்று நடாத்தி முன்னெடுத்ததோ இதற்கு தலைகீழான அரசியலாகும்.





சிங்கள மொழியை மட்டும் ஆட்சிக்கரும மொழியாக்கும் போது, இத்திட்டமானது, வரலாற்றுப்புகழ் மிக்க இன்னுமொரு மொழியாகிய தமிழ் மொழியை தமது வாழ்வின் ஆதரமாகக் கொண்ட ஒரு தேசத்தின் இருப்பைச் சிதைக்கும் ஒரு அழிவுத்திட்டம் என அவருக்கு நிச்சயமாகத் தெரியும். இக்கால கட்டத்தில் இடதுசாரி எனத் தம்மை அழைத்துக் கொண்ட பலர், பண்டாரநாயக்கவின் அரை இடதுசாரிக்கொள்கையிலும் அவரது தேசிய மயமாகக்கல் சாகசத்திலும் கிறங்கியதுடன், அதற்கு பின்னே புதைந்திருந்த மோசமான சிங்கள சோவினிசக் கொள்கையை காப்பாற்றிக் கரை சேர்த்தனர். இக்காலத்தில் அகில இலங்கை தமிழ் கொங்கிரசுக்குள் இருந்து பிறப்பெடுத்துக் கருநிலையில் இருந்த தமிழரசுக்கட்சி முன்னயதைப் பின்தள்ளி தமிழ் மக்களின் அரசியல் தலைமையை பொறுப்பேற்றுக் கொண்டது. அத்தலைமையானது சர்வதேச அரசியல் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொண்டது.

அடுத்தது, சிறிமாவோ பண்டார நாயக்க வின் இரண்டு ஆட்சிக் கால கட்டங்கள். இங்கு மொழி அடக்குமுறையானது நடைமுறையில் தீவிர வடிவம் பெற்றது. சிங்கள பௌத்த நாட்டுக்கான அரசியல் யாப்பு வரையப்பட்டது. அரசு யந்திரம் முற்றிலும் சிங்கள மயமாக்கப்பட்டது. சிங்கள படைகளின் ஆக்கிரமிப்பு நமது மண்ணில் தொடக்கி வைக்கப்பட்டது அடங்கலாக, அடக்குமுறைகளின் உக்கிர வடிவங்கள் நடைமுறைக்கு வந்தன. அன்றும் இடதுசாரிகள் எனக் கூறிக்கொண்டவர்கள் ஐக்கிய முன்னணி என்ற முற்போக்கு முகமூடியுடன் என்னவெல்லாம் செய்தார்கள். எப்படி சிங்களச் சோவினிசத்தைக் காப்பாற்றிக் கரைசேர்த்தனர் என்பதும் தனியான வரலாறு. இக்காலத்திலும் நமது தரப்பில் எதிர்வினையாக, ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு இடம்பெற்றது. துண்டுபட்டுக்கிடந்த தமிழ் மக்களும் கட்சிகளும் அமைப்புகளும் ஓரணி திரண்டன. தமிழர் விடுதலைக் கூட்டணி எனும் கூட்டுத்தலைமையானது தலைமையைப் பொறுப்பேற்றுக் கொண்டது. இதுவும் சர்வதேச அரசியல் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டது.

அடுத்தது சந்திரிகா பண்டாரநாயக்க கட்டம். தேசிய முரண்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட ஒரு நூற்றாண்டு வரலாற்றின் இறுதிக்கட்டம் இதுவெனலாம். இக்கால கட்டத்தில் நமது தேசத்தை அழித்தொழிக்கும் வழிமுறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. இங்கும் இடதுசாரிகள், லிபரல்கள் எனப்பலர் இந்த சிங்கள ஆட்சியைத் தாபித்துப் பாதுகாத்தார்கள். இக்காலகட்டத்திலும் அடக்குமுறையின் உக்கிரம் அனைத்து தமிழ் மக்களையும் ஒருமைப்படுத்தியது. தமிழ் அமைப்புகள் கட்சிகள் யாவும் ஒருமித்த தேசிய உணர்வை வெளிப்படுத்துகின்றன. தமிழ் தேசம் தன் எதிரிகளையும் நண்பர்களையும் தெளிவாக இனங்கண்டு வருகின்றது. இந்த மூன்றாவது கட்டத்தில் நமது தேசம் இராணுவ ரீதியில் பலமான நிலையில் உள்ளமை ஒரு குறிப்பான புதிய பண்பாகும். அதே சமயம் குறிப்பான இன்றைய உலக சூழலில் ஒரு அரசியல் கூட்டுத் தலைமைத்துவத்தை நம் தேசம் கோரி நிற்கின்றது.

இப்புதிய தீர்க்கமான கட்டத்தில் சிறிலங்கா அரசும் அதன் ஆட்சித்திறனும் பொருளாதாரமும் அழிவு நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றது. அரசியல் மற்றும் சிந்தாந்த ரீதியில் சிங்கள சோவினிசம் அதன் உச்சத்தில் நிற்கின் றது. கோலோச்சுகின்றது. ஆளுங் குழுமம் தாம் விரும்பினாலும் மீள முடியா படுகுழியில் வீழ்ந்து கிடக்கின்றது. ஆக, சிங்கள சோவினிசம் அதன் வரலாற்று விதிப்படி தன் இறுதிக்கட்டத்தில் நிற்கின்றது. புதியதும் அரசியல் முக்கியத்துவமும் வாய்ந்த இச்சூழலில், தமிழ் தேசத்தின் பன்முகத்தன்மைகளை உள்வாங்கி தமிழீழ விடுதலைப் போராட்டமானது பலமான அரசியல் தலைமைத்துவத்தின் கீழ், சர்வதேச அங்கீகாரத்தையும் பெற்றுக்கொண்டும், தன் தேசிய இராணுவ வலிமையை உறுதிப்படுத்திக் கொண்டும் தனது வரலாற்று முத்திரையை விரைவில் பதிக்கப்போவது இன்னுமொரு வரலாற்று விதியாக உள்ளது. இந்த புதிய வரலாற்றில் தமிழ் தேசத்தின் அடக்கப்பட்ட, விளிம்பு நிலை மக்களையும் உள்ளடக்கி அனைத்து மக்களின் தேசியஅபிலாசைகள் நிறைவேற்றுவதாக இவ்விதி தன் முத்திரையை பதிக்கும்.

தந்தை தொடக்கி வைத்த ஆக்கிரமிப்பு அரசியல் கருத்தானது, தாயின் காலத்தில் சிங்கள பௌத்த குடியரசாக கட்டுமாணம் பெற்று, மகள் காலத்தில் வரலாறு காண இரத்தம் சிந்தல்களையும் ஆழ வடுக்களையும் தாங்கி முடிவிற்கு வரப்போகின்ற மாபெரும் புதிய அரசியல் திருப்பம் ஒன்று நமது பிராந்தியத்தில் நிகழவிருக்கிறது. இந்த நிகழ்வானது, நமது மக்களின் எண்ணற்ற அர்ப்பணிப்புகள் இழப்புகளின் பெறுதியாக அமையப்போகின்றது. புத்தாயிரத்தின் முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் வரலாற்று அம்சங்கள் என்ற தலைப்பின் கீழ் அழியா இடம்பெறப் போவதை ஏகாதிபத்தியங்களால் கூட தடுத்து நிறுத்திவிட முடியாது. காரணம் ஏகாதிபத்தியங்கள் கூட வரலாற்று விதியை மீறி எதுவும் செய்து விட முடியாது.

- தருமு -

## எது பயங்கர.. (1ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மக்களில் பரிசோதனை நடாத்தும், நமது சுதேச விவசாயத்தையும் உயிரின வளங்களையும் அழித்தொழிப்பது அறிவுத்துறைப் பயங்கரவாதம்... இப்படி எத்தனையோ பயங்கரவாதத்தின் வடிவங்களை ஏகாதிபத்திய சக்திகள் வெளிப்படுத்தி வருகின்றன.

சிலுவை யுத்தங்களாலும், உலக யுத்தங்களாலும் கோடிக்கணக்கான மக்களைக் கொன்று குவித்தவர்கள். ஆசிய மக்களை அணுக்குண்டுகளுக்குப் பலியாக்கியவர்கள். இன்று வரையிலும் அணுக்கழிவுகளை கொண்டு மூன்றாம் உலக மக்களை அணுஅணுவாகக் கொலை செய்து கொண்டிருப்பவர்கள். கோடிக்கணக்கான மக்களைப் பட்டினி போட்டு, விண்ணியல் “சாதனைகள்” படைத்துக்கொண்டிருப்பவர்கள். வகைவகையான சித்திரவதைக் கருவிகளை போட்டி போட்டுக்கொண்டு சந்தைக்கு விட்டுக்கொள்ளும் அதே சமயம், தாம் சித்திரவதைக்கு எதிராக குரல் கொடுப்பதாக காட்டிக்கொள்பவர்கள். யுத்தக்கருவிகளைப் படைத்து, அவற்றை விற்றுத்தள்ள யுத்தங்களை தூண்டிவிட்டுக்கொண்டே, யுத்தத்திற்கு எதிராகக் குரல் கொடுப்பதாக காட்டிக்கொள்பவர்கள்... இவற்றையெல்லாம் என்னவென்பது?

எது உண்மையான பயங்கரவாதம்? யார் மெய்யான பயங்கரவாதிகள்? என்ற வினாக்களை இது வரை நாம் கூர்மையாகக் கேட்கத் தவறி விட்டோம். இப்போதாயினும் நாம் கேட்கத் தவறக் கூடாது. அதற்கான நேரம் இதுவே.

இந்த ஏகாதிபத்திய, பிராந்திய ஆதிக்க பயங்கரவாதிகள் இன்று வரையிலும் சிங்கள பயங்கரவாதத்தை ஆதரித்துப்பலப்படுத்தி வருகிறவர்கள். பயங்கரவாத நடவடிக்கைகளுக்கென சிங்களப் படைகளை பயிற்றுவித்துக் கொண்டிருப்பவர்கள். இனவெறி அரசு நம் தேசத்தை சவக்காடாக்கி இரத்த ஆறை ஓடவிட்டபோது பார்த்துக்

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# புரிந்து கொள்ளப்படவேண்டிய “புரிந்துணர்வு உடன்படிக்கை”

விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்கும், அடக்குமுறையாளர்களுக்கும் இடையில் அரசியல் தீர்வுகள் நோக்கி நடைபெறும் ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் பொதுவில் அடக்குமுறையாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதாகவே அமைகின்றன என்பதை பல்வேறு போராட்டங்களும் நமக்குக் கற்றுத் தருகின்றன.

இந்த படிப்பினைகளுடன், நாம் நமது தேசவிடுதலைப் போராட்டத்தின் தற்போதைய பேசுபொருளாயுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை (MOU) என்பதன் பண்பைப் பார்ப்போம். அரசியல் பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக, (நமது தேசமும் சிங்கள அரசும்) பரஸ்பர நல்லெண்ண சூழலை ஏற்படுத்துவதற்காக நோர்வேயினால் உருவாக்கப்பட்ட திட்டமே புரிந்துணர்வு உடன்படிக்கை.

இதன்படி, புலிகள் தரப்பில்: வடக்கு கிழக்குக்கு வெளியிலுள்ள ஏழு மாகாணங்களிலும் பகைமைச் செயற்பாடுகளை (குண்டுத் தாக்குதல், தற்கொலைத் தாக்குதல், படுகொலைகள், வன்முறை நடவடிக்கைகள்) கைவிட வேண்டும். இதன் முதல் வெளிப்பாடாக விடுதலைப் புலிகள் தமது காவலில் உள்ள அனைத்து போர்க் கைதிகளையும் விடுவிக்க வேண்டும். (சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் விடுதலைப்போராளிகள் பற்றி இவர்களின் கண்களில் படவில்லை. கடந்த காலத்தில் கொல்லப்பட்ட கைதிகள் பற்றியும் எதுவுமில்லை).

அரசு தரப்பில்: வடக்கு கிழக்கில் குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள பொருளாதாரத் தடையை குறிப்பிட்ட அளவிற்குத் தளர்த்த வேண்டும். (இங்கு தளர்த்தப்பட வேண்டும் என்றிருக்கிறதேயன்றி, நீக்கப்பட வேண்டுமென்று கூறப்படவில்லை).

புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறியுள்ளபடி, நமது தேசம் தான் போராட்ட நடவடிக்கைகளை நிறுத்திட வேண்டுமேயன்றி, சிங்கள அரசு நம்மீது மேற்கொள்ளும் யுத்தத்தை அல்ல. இந்த உடன்படிக்கையைத் தயாரிப்பதில் சம்பந்தப்பட்டுள்ளவர்களை (நேரடியாகவும் மறைமுகமாகவும்) பொறுத்தவரையில் சிங்கள அரசு நமது மண்ணில் மேற்கொண்டிருக்கும் ஆக்கிரமிப்பு யுத்தமானது சட்டரீதியானதாகும். இதன்படி ஏகாதிபத்திய மற்றும் சிறிலங்கா அரசுகளின் நலன்கள் ஒத்திசைகின்றன.

சிங்கள பிரதேசத்தில் புலிகள் எதிரிகளின் நிலைகளை இலக்கு வைத்து தாக்குவதை நிறுத்த வேண்டும். ஆனால், தமிழீழ மண்ணை சிங்கள அரசு குண்டுகளால் சிதறடிப்பதை மறைமுகமாக அங்கீகரிப்பதாக அல்லவா இந்த சரத்துகள் அமைந்துள்ளன.

அதன் அடிப்படை சாராம்சத்தில், பாலஸ்தீன மற்றும் அயர்லாந்து தேசங்களின் மீது திணிக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் அடக்குமுறை பண்பிலிருந்து இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை பெரிதாக எவ்விதத்தில் வேறுபடுகிறது? இவ்வுடன்படிக்கையை நமது தேசம் ஏற்றுக்கொண்டு செயற்படுத்த வேண்டும் என்பதை மறைமுகமாக வலியுறுத்தும் ஆயுதமாக “பிரித்தானியா புலிகளை தடைசெய்ய இடமுண்டு” எனும் மிரட்டலும் பிரச்சாரப்படுத்தப்பட்டு வருகிறது.



எப்படியாயினும், நமது தேசப் போராட்டம் இராணுவ, அரசியல் ரீதியாக பலமாக நிலையிலிருக்கும் கட்டத்தில்தான் நாம் இந்த உடன்படிக்கையை எதிர்கொள்கிறோம். ஆதிக்க சக்திகளின் நிர்ப்பந்தங்கள், அழுத்தங்கள் இருப்பினும், நமது தேசம் தான் ஈட்டிக்கொண்டிருக்கும் அரசியல்வெற்றியின் மூலம், நமது போராட்டத்திற்கு பாதிப்பில்லாத வகையில் இதை எதிர்கொள்ள முடியும். அவ்வகையில், புரிந்துணர்வு உடன்படிக்கையை முற்றிலும் நமது தேசத்தின் நிகழ்ச்சி நிரலுக்குட்பட்டதொன்றாக நாம் மாற்றிட வேண்டும்.

இதற்கு முன்னோடியாக, பேச்சுவார்த்தைக்கான நல்லெண்ண சமிக்ஞையாக, விடுதலைப் புலிகள் தாமே யுத்தநிறுத்தத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடித்துள்ளனர். மேலும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் இன்னும் கைச்சாத்திடாவிட்டாலும் கூட, அதில் கூறப்பட்டிருப்பவற்றை புலிகள் தாமே நடைமுறையில் செயற்படுத்தியும் வருகின்றனர். அவ்வகையில் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை நமது தேசத்தின் அரசியலில் (அது கைச்சாத்திடப்படுவதற்கு முன்னமேயே) பரீட்சித்துப் பார்க்கப்படுவதுடன், ஒப்பந்தத்தின் பின்னரும் நமது போராட்டத்திற்கு பாதகமில்லாதவாறு அதை கடைபிடிப்பதில் நாம் வெற்றிகொள்ள முடியும் என்பதை புலிகளின் சமகால அரசியல் முன்னெடுப்புகள் உறுதிப்படுத்தி வருகின்றன.

இதுவரை கால யுத்த நிறுத்தங்களின் போது நமது தேசம் தன்னை இராணுவ ரீதியாக மீள் ஸ்தாபிதம் செய்துகொள்வதையும் இலக்காகக் கொண்டிருந்தது. தற்போது, நம் தேசம் தன்னளவிலும், சர்வதேச அளவிலும் அரசியல் ரீதியாக ஸ்தாபித்துக் கொள்வதுவே இச்சந்தர்ப்பத்தில் நமது தேசத்தின் பிரதான இலக்காக அமைகிறது.

அதேபோல், பிரதானமாக நமது தேசத்தின் அரசியல் பலம் என்பது நமது மக்களின் சமூக, பொருளாதார மற்றும் அம்சங்களுடன் பிணைந்துள்ளது. இதுவரைகால தொடர் அழித்தொழிப்பு யுத்தத்தினாலும் பொருளாதார தடையினாலும் நாம் ஒரு தேசம் எனும் வகையில் நலிவடையச் செய்யப்பட்டுள்ளோம். இந்நிலை இப்படியே தொடருமாயின் நமது எதிர்கால வெற்றிகரமான இராணுவ, அரசியல் முன்னெடுப்புகளுக்கு பாதகமாயமைந்திடும். அவ்வகையில், யுத்த நிறுத்தம் மற்றும் பேச்சுவார்த்தை என்பதனூடாக நாம் நம்மை முடிந்தவரையில் தேசமாக புனரமைத்துக் கொள்ள வேண்டிய, விருத்தி செய்ய வேண்டிய மற்றும் பல வழிகளிலும், வகைகளிலும் எம்மை தயார்செய்ய வேண்டிய தேவைகளையும் கொண்டுள்ளோம்.

தேசத்தின் சில அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக யுத்த நிறுத்தம் என்பது எவ்வகையிலும் பலவீனமானதல்ல. இராணுவ, அரசியல் தளத்திலான பலமான நிலைமைகளைக் கொண்டு நம் தேசம் தன்னை அனைத்து தளங்களிலும் பலப்படுத்திக்கொள்ள விளையும் ஒரு முன்னேற்றகரமான கட்டமாகவே இதைக் காண வேண்டும்.

பொருளாதாரத் தடை தளர்த்தப்பட வேண்டியது நமது தேசத்தின் அரசியல் வெற்றிக்கான பிரதான காரணிகளில் ஒன்றாகும். புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுதலில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படும் சாதகமான அணுகுமுறையின் மூலம் சிங்கள அரசை உடன்படிக்கைக்கு அமைய பொருளாதாரத் தடையை தளர்த்த, நமது தேசம் தன் அரசியல் ஆளுமையின் மூலம் அழுத்தம் செலுத்தியுள்ளது. சிங்கள அரசு உடன்படிக்கையில் முதலில் கைச்சாத்திட்டால் மட்டுமே தாமும் கைச்சாத்திடுவதாக அறிவித்திருக்கும் அளவுக்கு புலிகளது பலமான அரசியல் நிலைப்பாட்டின் பொருத்தப்பாட்டை நாம் இங்கு தொடர்புபடுத்தி பார்க்க முடியும்.

மறுபுறம், சிங்கள அரசின் அரசியல் இராணுவ முன்னெடுப்புகளானது, அது இதுவரை “சமாதானம்” என கூச்சலிட்டு வந்ததற்கு நேர்மாறாக உள்ளது. சமாதானத்திற்கான சமிக்ஞைகள் நமது தேசத்தினால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அதை முழுமையாக நிராகரித்து விட்டு, தனது பலவீனமான இராணுவத்தினை தீவிர அழித்தொழிப்பு யுத்தத்திற்கு முடுக்கிவிட்டுள்ளது. “பலமான நிலையிலிருந்து பேச்சுவார்த்தையை எதிர்கொள்ளுதல்” எனும் தந்திரோபாயத்தை, தனது பலவீனமான நிலையிலிருந்து சாதிக்க சிங்கள அரசு பிரயத்தனப்படுகிறது. இது அதை மென்மேலும் அரசியல் வீழ்ச்சிக்கு இட்டுச் செல்வதாயுள்ளது.

தனது தந்திரோபாய நிலைசார்ந்து ஒரு சுயமதிப்பீட்டைத் தன்னளவிலும் புறநிலை சார்ந்தும் செய்து கொள்ள முடியாது சிங்கள இனவெறியானது சிறிலங்கா அரசைத் தடுத்து வருகிறது. இதுயாவும் இன்று சர்வதேச அளவிலான குற்றச்சாட்டுகளையும், அதிருப்திகளையும் ஆதரவு இழப்பையும் சிங்கள அரசு எதிர்கொள்ளக் காரணமாகியுள்ளது.

எதிரியின் பலவீனமானதும், நமது பலமானதுமான அரசியல் இராணுவ நிலைமைளை துல்லியமாக மதிப்பிட்டு நமது இலட்சியங்களை ஈட்டிக் கொள்வதை நோக்கி முன்னேறுவோம்.

- சுபத்திரா

# சமாதான உடன்படிக்கைகளும், படிப்பினைகளும்!

இதுவரை காலமும் இந்து சமுத்திரத்தின் அரசியல் விவகாரமாக இருந்து வந்த நமது தேச விடுதலைப் போராட்டம் தற்போது சர்வதேச அரசியல் விவகாரமாக பரிணமித்துள்ளது. இந்திய அரசுடன் அமெரிக்க, பிரித்தானிய ஏகாதிபத்தியங்களும் கூட்டிணைந்து நமது தேசத்தின் விவகாரத்தில் நேரடியாகப் பிரவேசித்துள்ளன.

இப்புற நிலைமைகள் சார்ந்து, நமது போராட்டத்தை சர்வதேச அளவிலான அரசியல் விவகாரமாக நாம் மதிப்பிட்டுக் கொள்ளும் அதேநேரம், சர்வதேச அளவில் அரசியல் தாக்கம் செலுத்தி வரும் சக விடுதலைப் போராட்டங்களில் இந்த ஏகாதிபத்திய சக்திகள் தலையிட்டு எத்தகைய நிலைமைகளை அத்தேசங்களில் உருவாக்கினர் என்பதை மதிப்பிட்டுக் கொள்வதும் நமக்கு சம அளவிலான முக்கியத்துவமுடையதாகும்.



சர்வதேச அளவில் மிக அண்மைக் காலத்தில் நடைபெற்ற மிக பிரசித்தமான இரு உடன்படிக்கைகள் பாலஸ்தீன - இஸ்ரேலிய உடன்படிக்கை மற்றும் அயர்லாந்து - இங்கிலாந்து உடன்படிக்கைகளாகும்.

பெரிதும் வேறுபட்ட வரலாறு, சூழல், போராட்ட நிலைமைகள் ஆகியனவற்றைக் கொண்டிருந்த போதும் விடுதலைக்காகப் போரிட்டுவரும் இரு தேசங்கள் எதிர்கொண்ட உடன்படிக்கைகள் மற்றும் படிப்பிடினைகளிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய தேவை நமக்குண்டு.

பாலஸ்தீன தேசத்தின் பிரதிநியான பாலஸ்தீன விடுதலை அமைப்பிற்கும் (பி.எல்.ஓ.) சியோனிச (இஸ்ரேலிய) அரசிற்குமிடையில் 1993 ஒக்டோபரில் ஒஸ்லோவின்(நோர்வே) தலையீட்டுடன் ஒரு ஒப்பந்தம் நடைபெற்றது. 1993, 1995, 1999 என மூன்று கட்டங்களாக நடைபெற்ற இவ் ஒப்பந்தம் ஒஸ்லோ ஒப்பந்தம் என அழைக்கப்படுகிறது.

இவ் ஒப்பந்தம் நடைபெற்ற காலகட்டத்தில் மேற்காசியாவின் அரசியல் நிலைமைகள் எவ்வாறிருந்தன எனப்பார்ப்போம். எண்ணெய் வியாபாரத்தில் அரபுலகம் கொண்டிருந்த ஆளுமையை சிதறடித்து, தனது கட்டுப்பாட்டுக்குள் அரபு பொருளாதாரத்தைக் கொண்டு வரும் நோக்குடன் அமெரிக்க ஏகாதிபத்தியம் குவைத்தை தனது கைக்கருவியாக்கியது. எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும்விட குறைவான விலைக்கு அமரிக்காவுக்கு குவைத் எண்ணெய் ஏற்றுமதி செய்யத் தொடங்கியது. குவைத்தின் இந்த துரோகத் தனத்தை எதிர்த்து ஈராக் போர் தொடுத்தது. தமது அடிமையை பாதுகாப்பதற்காகவும் அரபுலகை அச்சுறுத்தி அடிபணிய வைக்கும் நோக்குடனும் வெள்ளை ஏகாதிபத்தியங்கள் ஒன்றிணைந்து ஈராக்மீது யுத்தம் மேற்கொண்டன (1990 வளைகுடாபோர்).

இக்கட்டத்தில் அரபுலகின் சில நாடுகள் ஏகாதிபத்திய சார்பை மேற்கொள்ள , சிலர் அரபுலகின் உரிமைக்காக ஈராக்குடன் இணைந்து நின்றனர். பி.எல்.ஓ. ஈராக்கை ஆதரிப்பது எனும் பாதையை தெரிவு செய்தது. இதன் காரணமாக, பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் பெரும் இழப்புகளை எதிர்கொண்ட நிலையில் அகரீதியாக வீழ்ச்சியுற்றும் ஒருகட்டத்தில் தனக்கு பெரும் ஆதரவு வழங்கிவந்த சக அரபுநாடுகளின் ஒத்துழைப்பை இழந்துவரும் நிலையிலும் இருந்தது.

இக்காலத்திலேயே சோவியத் யூனியனின் சிதைவும் நிகழ்கிறது. சோவியத்தின் இருத்தலானது அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குளப்பொழுதும் சவாலாக இருந்த நிலையில், மூன்றாமுலக மக்கள் தமக்கான முகாமை தெரிவு செய்துகொள்வதற்கான வாய்ப்பைக் கொண்டிருந்தனர். சோவியத் முகாமை சார்ந்து பலம்பெற்றிருந்த பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் சோவியத்தின் சிதைவால் தனக்கான ஆதார முகாமையும் இழந்து நின்றது.

சியோனிச அரசும் அதன் நிழலாக செயற்படும் அமெரிக்காவும், போருக்குப் பிந்திய இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒஸ்லோவின் மத்தியஸ்தத்துடன், (சி.ஐ.ஏ. மூலம் யஷீர் அரபாத்தை பலவாறும் அச்சுறுத்தி) பாலஸ்தீன விடுதலை அமைப்பின் மீது



ஒப்பந்தத்தை திணித்தன.

ஒஸ்லோ ஒப்பந்தத்தின் அடிப்படை நாசகாரம் என்ன என்பதை, விருதுபெற்ற பிரித்தானிய பத்திரிகையாளர் ரொபர்ட் பிஸ்க் மிகத்தெளிவாகவே வெளிப்படுத்தியுள்ளார், (தி இன்டிபென்டன்ட்,ஒக். 13): “தமக்கான ஒரு அரசை உருவாக்க இயலாத, அரபு மண்ணில் யூதக் குடியேற்றங்களை தடுத்து நிறுத்தாத, கிழக்கு ஜெருசலத்தில் அரபுத் தலைநகர் ஒன்றை ஸ்தாபிக்க உரித்துரிமை கிடைக்கப் பெறாத ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதற்கு பாலஸ்தீனியர்கள் அமெரிக்காவினாலும் இஸ்ரேலினாலும் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.... தண்ணீர்ப் பிரச்சனை, 3.6 மில்லியன் பாலஸ்தீன அகதிகளின் எதிர்காலம், ஜெருசலத்தின் நிலையும் இஸ்ரேலியக் குடியேற்றங்களும், பாலஸ்தீனத்தின் இறைமை போன்ற பெரும்பாலான தீர்க்கப்படாத பிரச்சனைகள் இறுதி பேச்சுவார்த்தைகளுக்கு விடப்பட்டன. ஒப்பந்தத்தில் உடன்பட்டபடி குறிப்பிட்ட பகுதிகளில் இஸ்ரேலிய படையினர் திருப்பியழைக்கப்பட்ட பின்னரும், மேற்குக் கரையில் 56 வீதமான பிரதேசம் இன்னும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது”.(1)

ஒஸ்லோ முதலாங்கட்ட ஒப்பந்தம் 1993இல் கைச்சாத்திடப்பட்டதென்றால், இறுதித் தீர்வுகளுக்கான பேச்சுவார்த்தை அதிலிருந்து ஆறு வருடங்களுக்கு ஒத்திப் போடப்பட்டது. இந்த சமாதான தயாரிப்புகளுக்கான ஆறு வருட இடைக்காலத்தை தனக்கு சாதகமாக்கிக் கொண்ட சியோனிச அரசு யூதக் குடியேற்றங்களை விஸ்தரித்து, பாலஸ்தீன மண்ணை தன்னிஷ்டத்திற்கு துண்டாடி ஒன்றிலிருந்து ஒன்றை தனிமைப்படுத்தியது. மேற்குக் கரையில் அத்துமீறிக் குடியேற்றப்பட்ட இரண்டு இலட்சம் யூதர்கள் சுதந்திரமாக திரிகையில், பாலஸ்தீனியர் தனிமைப்படுத்தப்பட்ட, சுற்றிவர இராணுவ கவசவாகனங்களால் வேலியிடப்பட்ட பகுதியில் மோசமான அடக்குமுறைகளை எதிர்கொண்டனர். “நிறவெறி அடக்குமுறையிலும் விட குரூரமானது” என நெல்சன் மன்டேலா அவர்களே குறிப்பிடுமளவுக்கு ஒப்பந்தத்தின் பின்னரான பாலஸ்தீன நிலைமைகள் அமைந்தன. இறுதி ஒப்பந்தத்தை நோக்கிய சமாதான முன்னெடுப்புகள் இவ்வாறு அமைந்திருந்தன.

ஒப்பந்தத்தின் பின்னர் பாலஸ்தீனத்தில் உருவான நிழல் அரசாங்கத்தால் பாலஸ்தீன மக்களுக்கு எந்த நன்மைகளும் கிடைக்கப்பெறவில்லை. பாலஸ்தீனிய தாயகத்தின் 22 வீதமான பிரதேசமே பாலஸ்தீனியரின் கட்டுப்பாட்டுக்குள் உட்பட்டதாயுள்ளது.

ஒஸ்லோ முதலாங்கட்ட ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக ஆறு வருடங்களின் பின்னர் (1999 செப்ரம்பர் 9ம் திகதி) சியோனிச அரசும் பி.எல்.ஓ.வும் “பரஸ்பர அங்கீகாரம்”(mutual recognition) இல் கைச்சாத்திட்டனர்.

அதன்படி, இஸ்ரேலின் இருப்பை பி.எல்.ஓ. அங்கீகரிக்கிறது. மறுபுறம், சர்வதேச சட்டங்களிலுள்ள நான்கு வகையான அங்கீகாரங்களில் நான்காவதான, புரட்சிகர இராணுவ சதி அமைப்பாக பி.எல்.ஓ.வை இஸ்ரேல் அங்கீகரிக்கிறது. (2)

பாலஸ்தீன மண்ணை அபகரித்து தனது சியோனிச ஆட்சியை அத்துமீறி ஸ்தாபித்துக் கொண்டுள்ள இஸ்ரேலை, ஒரு சுதந்திரமான இறைமையுடைய தேச அரசு எனவும் அதன் இருத்தலை இயற்கையானதாகவும் வரலாற்றுபூர்வமானதாகவும் மிக உயர்ந்த பட்சமான அங்கீகாரத்தை வழங்க பி.எல்.ஓ. தள்ளப்பட்டது.

என்ன துர்ப்பாக்கியம்? தமது மண்ணை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் இஸ்ரேலின் இறைமையை பாலஸ்தீனியர் (நிர்ப்பந்தத்தினால்) அங்கீகரிக்கிறார்கள். பாலஸ்தீன மண்ணை அபகரித்துக் கொண்ட இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களால், பாலஸ்தீன மண்ணின் மக்களது இறைமை சதி என்பதாக தரங்குறைக்கப்படுகிறது.

அதேபோல் பி.எல்.ஓ. தனது அனைத்து வன்முறை

(தொடர்ச்சி 5ஆம்பக்கம்)

# மாணவர்களின் மகத்தான பாத்திரம்!

தமிழீழ விடுதலைப் போராட்ட வளர்ச்சிப் போக்கில் பல்வேறு கால கட்டங்களிலும் மாணவர்களின் பங்குபற்றலானது புதிய எழுச்சிகளையும், சமூக அரசியல் போக்கில் திருப்பங்களையும் ஏற்படுத்திவருகின்றது. இன்று தேசப் போராட்டம் சர்வதேச அரசியல் விவகாரமாக மாறியிருக்கும் நிலையில், அதை எதிர்கொண்டு, பன்முக அரசியல் பலத்துடன் தேசத்தை விடுதலை நோக்கி நகர்த்திச் செல்லும் பணியில் நமது மாணவர்கள் முன்கையெடுத்து செயற்படுவது போராட்டத்தை மேலும் ஜீவத் துடிப்புமிக்கதாக மாற்றுகிறது.

தாயக விடுதலைக்காக தமிழீழ மாணவர் சக்தியானது இன்று தமிழீழத்தில் நடாத்திவரும் எழுச்சிகளும் போராட்டங்களும் கடந்த காலத்தில் இருந்துவந்த இருண்ட அரசியற் பக்கங்களை உடைத்துக் கொண்டு எமது தேசவிடுதலைப் போராட்டம் இன்று கோரி நிற்கும் பன்முகத்தன்மையினை போராட்ட அரங்கிற்கு கொண்டு வந்துள்ளது.

அண்மைக்காலங்களில்குறிப்பாக யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் செயற்பாடுகளானது அரச கட்டுப்பாட்டுப் பிரதேசமான பளையில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையில் சிக்குண்ட பொதுமக்களை விடுவிப்பதில் தொடங்கி அரச அடக்குமுறைகளை எதிர்த்தும், தமிழ்க் கட்சிகளின் அராஜகப் போக்ககளுக்கெதிராகவும் போராட்டங்களை நடாத்திவந்ததோடு, இன்று பல்கலைக்கழக சமூகமாக தேசத்தின் பல்வேறு சக்திகளையும் தம்முடன் இணைத்து சுயநிர்ணய உரிமைக்கான வெகுஜன எழுச்சிப் போராட்டங்களையும், அரசியல் ரீதியாக மக்களை விழிப்புணர்வு கொள்ளவைக்கும் செயற்பாடுகளையும் முன்னெடுத்துச் செல்கின்றனர்.

அதேபோல், தென்தமிழீழத்தில் அரச அடக்குமுறைகளுக்கு எதிரான கிழக்கு பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் தீவிரமடைந்துவரும் போராட்டங்கள், தமிழர் தரப்பில் நிகழ்த்தப்படும் மக்கள் விரோதச் செயற்பாடுகளுக்கு எதிரான கண்டனங்கள், தேசத்தின் தலைமைச் சக்தியான புலிகளை தடைசெய்ய முயலும் பிரித்தானிய சூழ்ச்சிகளுக்கு எதிரான உரிமை முழக்கங்கள் என்பன தேசவிடுதலையில் தொடர்ந்துவரும், முனைப்படைந்துவரும் மாணவர்களின் பங்கினை காட்டி நிற்கின்றன. தேசத்தின் மக்கள்சார் அரசியலை பலப்படுத்தும் மாணவர் போராட்டங்களை மேலும் உரப்படுத்தும் வகையில் தென் தமிழீழத்திலும் வவுனியாவிலும் மாணவ ஒன்றியங்களின் எழுச்சிகளும், ஒருமைப்பாட்டுப் போராட்டங்களும் தீவிரமடைந்து வருகின்றன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் சமூகத்தினுள் உள்ளார்ந்து வளர்ச்சியடைந்துவரும் போராட்ட சக்திகள் குறிப்பிட்ட கால கட்டங்களில் தமது ஆற்றலுடன் வெளிப்படும் என்பதை இவ்வகை எழுச்சிகளும் போராட்டங்களும் காட்டி நிற்கின்றன.

இன்று நமது தேசத்தில் முனைப்படைந்து வரும் மக்கள் எழுச்சிகளையும், அனைத்து சமூக சக்திகளையும் அவற்றின் தனித்துவங்களுடன் அணிதிரட்டி, சிதறிக்கிடக்கும் தேசத்தின் அரசியல் வளங்களை ஒருங்கிணைத்து அரசியல் தலைமைத்துவம் வழங்குவதில் விடுதலைப் புலிகளிடம் காணப்படும் குறைபாடுகளும், மறு புறம், இத்தகைய மக்களது அதிகாரத்தை முதன்மைப்படுத்திடுவதில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட மாற்று அரசியல் சக்திகள் தேசத்தில் வளர்ச்சியடையாததும் துரதிர்ஷ்டமாகும். இந்நிலையில், மாணவர்கள் மக்கள்சார் அரசியலை பிரதிநிதித்துவப்படுத்தி செயற்பட முன்வந்திருப்பது வரலாற்று முன்னுதாரணமாகும்.

மாணவர்கள் எமது தேசத்தின் முனைப்பான அரசியல் சக்தி என்ற தனித்துவத்துடன் தேசத்தைப் பலப்படுத்தவதற்கான தேசியக் கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்களை நடாத்துவதும், அது சார்ந்து மக்கள் எழுச்சிக்கான அரசியற் செயற்பாடுகளை - மக்களை அமைப்பாக்கம் செய்யும் பண்புடன் - முன்னெடுத்து வருவதானது, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மக்கள் போராட்டத்திற்கான அடித்தளமாக பன்முக அரசியல் சக்திகள் வளர்ந்து வருகின்றன என்கின்ற நம்பிக்கையை மேலும், மேலும் வெளிப்படுத்தி நிற்கின்றது.



மாணவர் சமூகம் தேசம் தழுவிய ரீதியில் மட்டுமல்ல சர்வதேச அளவிலும் பாரிய அழுத்தங்களைக் கொடுக்கக்கூடிய, தாக்கங்களை நிகழ்த்தக் கூடிய மாபெரும் சக்தியாகும். அதற்கான திசையிலும் நிச்சயம் வளர்ச்சி பெறும்.

தேசத்தின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் சக்தியாகவும், சமூகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பலமான சக்தியாகவும் விளங்கும் மாணவர்கள் இன்று ஆற்றவேண்டிய பாத்திரம் குறித்து மிகவும் தெளிவுடனும், தீர்மானகரமாகவும் செயற்படுவதினூடாக எமது தேசத்தின் விடுதலையில் மகத்தான பங்கு வகிக்க முடியும். இதனை எமது தேசம் இன்று நமது மாணவர்களிடம் கோரி நிற்கின்றது.

இன்று ஆதிக்க சக்திகள் எவ்வாறு தமது நலனுக்கு அறிவியலைப் பயன்படுத்துகின்றனவோ, அதற்கெதிராக, மக்கள் நலனுக்கான, மானுட விடுதலைக்கான அறிவியல் இணைப்புடன் போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் புதிய சமூகத்தைப் படைப்பவர்களாக மாணவர்கள் விளங்குகின்றனர். அறிவியலைக் கொண்டு பல்வேறு வகையான திரிப்புக்களைச் செய்து உலகை ஏமாற்றிவரும் எதிரியை அம்பலப்படுத்தவும், மக்களை அரசியல் விழிப்புணர்வூட்டி இன்று அவசியப்படும் மக்கள் பலத்தை கட்டியெழுப்பவும் இம்மாணவ சக்தியினால் முடியும்.

எமது தேசம் விடுதலை பெற வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லாத ஆனால் பல்வேறு அரசியல் முரண்பாடுகளுடனும், கடந்தகால தேசவிரோத, மக்கள் விரோத செயற்பாடுகளால் விரிசல்களுடனும் இருக்கும் தேசத்தின் அரசியல் வளங்களை அரசியல் சமத்துவத்துடன் ஒன்றிணைத்து பன்முகப் போராட்ட வடிவங்களை எமது விடுதலைப் போராட்டத்தில் இணைத்து தேசத்தை பலப்படுத்தும் பாரிய கடமையை மாணவர்களால் ஆற்ற முடியும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று சந்தித்து நிற்கும் சர்வதேச நெருக்கடிகளை வென்று கொள்ள சர்வதேச ரீதியாக முனைப்பான, பலமான இணைப்பினை எமது மாணவர்களால் உருவாக்க முடியும். தமிழீழ மக்கள் புலம் பெயர்ந்து வாழும் சர்வதேச நாடுகளில் தமிழ் மாணவர்கள் ஏற்கனவே உருவாக்கிவரும் மாணவர் ஒன்றியங்களும் எமது தேச விடுதலைக்கான பலமான தளமாக அமைந்துவருகின்றது. சர்வதேச சமூகத்தினை எமது போராட்டம் சார்பாக வென்று கொள்வது இன்றைய எமது தேசத்தின் உடனடித் தேவையாக இருப்பதற்கமைய தேசம் தழுவிய, சர்வதேசம் தழுவிய போராட்டங்களை, எழுச்சிகளை எமது மாணவர்கள் நடாத்த வேண்டும். இன்று எமது மாணவர்கள் நடாத்திவரும் போராட்டங்களாலும், இன்னும் ஆற்றவேண்டிய கடமைகளை கையிலெடுப்பதன் மூலமுமே எமது தேசத்தின் அரசியல் வளங்களை தேசம் நோக்கி இணைப்பதில் நம்பிக்கையை உருவாக்கி, தமிழீழக்குடியரசு அமைவது நோக்கி உறுதியுடன் முன்னேற முடியும்.

- சின்னான்

## சமாதான... (4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நடவடிக்கைகளையும் (ஆயுதப் போராட்டம்) கைவிட வேண்டுமென்பது பற்றியும் விலாவாரியான சரத்துக்களுடன், பி.எல்.ஓ. வின் கைகளைக் கட்டிப்போடுவதாக இவ் ஒப்பந்தம் அமைந்துள்ளது.

அடிப்படையில் பரஸ்பர அங்கீகார உடன்படிக்கையானது: 1) அத்துமீறி உருவாக்கப்பட்ட இஸ்ரேலுக்கு உயர்ந்தபட்ச அங்கீகாரத்தை பெற்றுத் தந்துள்ளது. 2) பாலஸ்தீனத்தின் இறைமையை அடிப்படையில் நிராகரிக்கிறது. 3) மக்களின் ஒரே பலமான ஆயுதப்போராட்டத்தை தடைசெய்கிறது.

எப்படி பொறுத்துக்கொள்வார்கள் விடுதலை உணர்வுடைய மக்கள் இந்த கொடிய அடக்குமுறையை. பி.எல்.ஓ. வின் கை கட்டப்பட்டுவிட்ட நிலையில் மக்கள் தாமே கிளர்ந்தெழுந்தனர். இந்திபாதா மக்கள் இயக்கம் வியாபித்தது. பெண்களும், சிறுவர்களும், இளைஞர்களும், ஆண்களுமாக பாலஸ்தீனம் எழுச்சியுற்றது. அடிமைத்தனத்தை விட உயிரைவிடலாம் எனும் விடுதலை வேட்கையுடன் கைகளையும் கற்களையுமே ஆயுதமாகக் கொண்டு மக்கள் எதிரியை எதிர்க்கத் தொடங்கினர். இன்று பாலஸ்தீனத்தின் உயிர்த்துடிப்பாக இந்திபாதா மக்கள் போராட்டம் திகழ்கிறது.

போராட்ட அமைப்புகளை எதிரிகள் நிர்ப்பந்தித்து, அச்சுறுத்தி, அவர்களின் கைகளை ஒப்பந்தங்களால் கட்டிப்போட்டு வைத்தாலும், விடுதலை வேட்கை கொண்ட மக்களின் முன்னால் ஏகாதிபத்தியம் காகிதப் புலியே என்பதை பாலஸ்தீனம் நமக்குக் கற்றுத் தருகிறது.

அடுத்து, ஆயிரமாண்டுகளாக நடைபெற்றுவரும் அயர்லாந்து தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு இங்கிலாந்து மேற்கொண்ட

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# துரோகத்தனத்திலிருந்து கைக்கூலித்தனத்திற்கு...

இன்றும் இனி வரும் அண்மைக் காலத்திலும், நமது தேசம் எதிர்கொள்ளவிருக்கும் மூன்று பெரும் ஆபத்துக்களை இட்டு விழிப்பாக இருப்போம்.

ஒன்று, ஏகாதிபத்திய மற்றும் பிராந்திய ஆதிக்க நலன்கள் நமது விடுதலைப் போராட்டதில் குறுக்கீடு செய்யும் ஆபத்து. இரண்டாவது, பலவீனத்தின் விளிம்பில் நிற்கும் சிறிலங்கா அரசின் அழித்தொழிப்பு வழிமுறைகள். மூன்றாவது, சிங்கள அரசின் ஏவலின் கீழ் தமிழ் கைக்கூலித்தனத்தின் செயற்பாடுகள்.

உலகெங்கிலுமுள்ள தேசங்கள் பலவற்றை ஏகாதிபத்தியங்கள் தமது அரசியல், பொருளாதார சிறைக்கூடத்தினுள் வைத்திருக்க முயல்வது குறித்து நமக்கெல்லாம் கணிசமான அளவிற்கு தெளிவுள்ளது எனின், இந்த நவீன உலகக் கொள்ளையர்கள் நமது தேசத்திற்கு மட்டும் பரிவு கொண்டு விதிவிலக்களிப்பர் என எதிர்பார்ப்பது நமது மோசமான அரசியல் அப்பாவித்தனத்தையே சுட்டி நிற்கும்.

சிறிலங்கா அரசானது, தனது பலவீனத்தை பலமாக மாற்றிவிடும் நப்பாசையுடன் கடுமையான அடுத்த கட்ட யுத்ததிற்கு தயாராகின்றது. நமது தேச விடுதலைப்போராட்டத்தின் முடிவான வெற்றியைத் தடுப்பதற்கு தன்னால் இயன்ற அனைத்துக் கொடுமையான அழித்தொழிப்புகளையும் மேற்கொள்வதற்கு இவ்வரசு தயங்காது என்பதைக் கணிப்பில் எடுத்துக் கொள்வது அவசியம்.

மூன்றாவது விடயமாகிய கைக்கூலித்தனத்தை குறித்து நாம் முன்னைய இரண்டையும் விட அதிகம் விழிப்பாக இருக்க வேண்டும். காரணம் இவ்வழிமுறை மிக நுட்பமானதாகும். முன்னய இரண்டும் நமது தேசத்தின் அந்நிய சக்திகளினால் மேற்கொள்ளப்படுபவை ஆகும். எனவே அவை ஒப்பீட்டளவிற்கு நம்மால் அடையாளங்காணப்படக்கூடியது. ஆனால் இந்த மூன்றாவது ஆபத்து பற்றி தொடர்ச்சியாக நாம் உரையாடிக் கொண்டிருக்க வேண்டும். எப்போதும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். கைக்கூலித்தனமானது, பொதுவில் எதிரிகளின் கட்டளைக்குப் படிந்து மக்களுக்கு மோசமான கெடுதிகளை இழைக்கும் என்பது தெரிந்ததே. சில சமயங்களில் நமது தேசத்திற்கு நல்லது செய்வது போலவும் அது தோற்றமளிக்கும். இப்படியான சந்தர்ப்பத்தில் ஒவ்வொன்றையும் கட்டுடைத்து அதனடியில் கிடக்கும் ஆபத்தைத் தெளிந்து கொள்ள வேண்டும்.

தேசத்துரோகம், கைக்கூலித்தனம் என்பன நமது தேசத்தின் சக்திகளை நமது தேசத்தின் நலன்களுக்கு எதிராக பயன்படுத்துவதாகும். போராட்ட சக்திகளால் எதிரிகள் தரப்பு துரத்தியடிக்கப்படுவது விரைவுபடுத்தப்படும் போது, துரோகத்தனத்திலும் கைக்கூலித்தனத்திலும் ஈடுபடும் சக்திகள் ஓடி ஒளிந்து கொள்ளும் என்பது பொதுவான உண்மையாகும். இது ஒரு போராட்ட விதிதான் என்பதிலும் சந்தேகமில்லை. ஆனாலும், எதிரிகள் மீது முடிவான வெற்றிகள் எட்டப்படும் அந்த இறுதித் தருணங்களில், எமது வெற்றியை முறியடிக்க எதிரிகள் எம்மத்தியிலுள்ள துரோகத்தனங்களையும், கைக்கூலித்தனங்களையும் உச்ச அளவில் பயன்படுத்திக் கொள்வர். இந்த வழிமுறைகளானது உள்ளார்ந்து நமக்குள் இருந்து கொண்டு நம்மைக் கெடுக்கச் செய்யும் இறுதிக்கட்டச் சதிகளாகும்.

துரோகத்தனம் என்பது தமது தனிப்பட்ட அற்ப சுயநலன்களுக்காக தேசத்தின் பரந்து பட்ட அல்லது அடக்கப்படும், சுரண்டப்படும் மக்களின் கூட்டு நலன்களை எதிரிகளுக்கு விற்றுப்பிழைப்பதாகும். கைக்கூலித்தனம் என்பது ஒரு படி மேலே சென்று, எதிரிகளுடன் முற்றிலுமாக ஒன்று கலந்து விடுவதாகும். முன்னய அம்சத்தில் எதிரிகளுக்கும் நமது தேசத்தின் துரோகிகளுக்கும் இடையே உடன்பாடுகளுடன் முரண்பாடுகளும் கூட காணப்படும். கைக்கூலிகள் என்ற பண்புக்கு மாறிவிட்டார்கள் எனின், அங்கு எதிரிகளும் கைக்கூலிகளும் இரண்டறக் கலந்து விடுவதன் காரணமாக முரண்பாடுகளுக்கு இடமிருப்பதில்லை. ஒருவர் தன்னுடன் தானே எப்படி முரண்பட முடியும்? என்ற வினாவை எழுப்புவோம் எனின் விடயம் இன்னும் இலகுவாக தெளிவாகும்.

இப்படிப்பட்ட அரசியல் கைக்கூலிகளின் இரண்டு பிரதான வழிமுறைகள் போராட்ட சக்திகளை அழித்தொழிப்பும் சலுகையளித்தலும் ஆகும். அடக்குமுறை இயந்திரம் இதற்கான அனைத்து வாய்ப்புகளையும் தன் கைக்கூலிகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றது. பொதுவில் மக்கள் நீண்ட கால நலன்களையும் உடனடி நலன்களையும் கொண்டிருப்பர். இந்நிலையில், கைக்கூலிகளின் இலக்கு நீண்டகால இலக்குகளுக்காக போராடும் சக்திகளை அழித்தொழிப்பது. உடனடி நலன்களுக்காக நிற்பவர்களுக்கு சலுகை அளிப்பது ஆகும். அழித்தொழிப்பிற்கு எதிரிகள் நன்கு பயிற்றப்பட்ட கொலைப்படைகளைப் பயன்படுத்துவர். சலுகையளித்தலுக்கு தமது அரசியல் முகவர்களைப் பயன்படுத்துவர். சில சமயங்களில் இந்த இரண்டு கைங்கரியங்களுக்கும் ஒரே சக்தியை பயன்படுத்தும் போது நிலைமைகள் நமக்கு இன்னமும் ஆபத்துமிக்கதாகின்றது.

இவ்வாறாக மக்களுக்குள் இருந்து கொண்டு, மக்களுடன் உறவாடிக்கொண்டு செயற்படும் இந்த கைக்கூலிகள். குறைந்த வளங்களைக் கொண்டு நம் தேசம் எதிரிகளுடன் பொருதும் போது, அது தனக்குள் அடையும் பலவீனங்கள், உள் முரண்பாடுகளை கணக்கிட்டும் அட்டவணைப்படுத்தியும் தமது எஜமானர்களாகிய எதிரிகளுக்கு நன்றிக்கடன் செலுத்தும் இச்சக்திகள் வெளிப்படையான எதிரிகளை விட மிகவும் நச்சுத்தன்மை வாய்ந்ததாகும்.

இப்படிப்பட்ட கைக்கூலிகளின் தீவிரமான அல்லது வன்முறைசார் செயல் வடிவங்களை வகைப்படுத்துவோம். ஆற்றல் மிக்க போராட்ட சக்திகளையும் மக்கள் சக்திகளையும் அழித்தொழித்தல். எதிரிகளுக்கு உளவுசொல்லுவது. எதிரிகளுடன் கைகோர்த்து இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுவது. இரகசிய கொலைப்படைகள் அமைத்து வேட்டை யாடுதல், மக்களின் போராட்ட அணிகளுக்குள் ஊடுருவுதல், சதி வேலைகளில் ஈடுபடுதல். போராட்ட சக்திகளை ஆத்திரமூட்டித் தவறான செயற்பாடுகளுக்கு இழுத்தல். ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்திப் பணிய வைத்தல். இணங்காதவர்களை அழித்தொழித்தல் இன்னும் இதுபோன்ற கைங்கரியங்கள் அமைகின்றன.

கைக்கூலிகள் மேற்கொள்ளும் இதர வடிவங்களை வகைப்படுத்துவோம். போராட்ட இலட்சியத்தை கொச்சைப்படுத்தல், இழப்புகளைக் காட்டி மக்களைப் பலவீனப்படுத்த முயலுதல், போராட்டம் வெற்றிபெறாது எனப் புலம்பித்திரிதல். பொய்த் தகவல்களைப் பரப்புதல். எதிரிகளிடம் இருந்து சலுகைகளாகப் பெற்ற எலும்புத்துண்டுகளை வீசுதல். கயவர்களுக்கு இலஞ்சம் கொடுத்து கைக்குள் போடுதல், தொடர்பு சாதனங்களில் இருக்கும் கோழைகளை விலைக்கு வாங்கி போராட்டத்திற்கு எதிராகப் பயன்படுத்தல், தாமே தொடர்பூடகங்களை மக்களின் மொழியில் உருவாக்கி நச்சுக்கருத்துக்களை பரப்புதல். மக்களின் துன்பங்களைக் கண்டு போலிக் கண்ணீர் வடித்தல். தாம் அப்பாவிகளைப் போல, மக்களில் கரிசனை கொண்டவர்கள் போலவும் முகமூடி போடுதல். மக்கள் சேவையே மகா சேவை என்பதாக பாசாங்கு செய்தல். இப்படிப்பல வாறாக உள்ளன.

மேற்படி இருவகை வழிமுறைகள் மூலமும் எதிரிகளுக்கு வாய்ப்பான சூழலை கைக்கூலிகள் உருவாக்கிக் கொடுப்பதன் காரணமாக, முழுத் தமிழ் தேசத்தையும் அடக்குமுறைக்குள் வைத்திருக்கும் சிங்கள அரசு, தன் அடிவருடிகளின் நடவடிக்கைகளுக்கு அவசியமான அனைத்தையும் தங்குதடையின்றி அள்ளிக்கொடுக்கத் தயங்குவதில்லை. அரசின் செல்லப்பிள்ளைகளாக எதிரிகளின் கோட்டைகளுக்குள் கூட இவர்கள் சுதந்திரமாக வலம் வருவதைக் காண முடியும். கதிர்காமர்கள், நீலன்கள், தேவானந்தாக்கள், மாணிக்கதாசன்கள், வரதர்கள் என இப்படி பல வகையறாக்களை நம் தேசம் தன் வரலாறு முழுவதும் அடையாளங் கண்டுள்ளது.

தற்போது விடுதலை ஆவேசம் நமது மக்களை வேகமாகப் பற்றிக் கொண்டு வருகின்றது. போராட்டம் மீதான நம்பிக்கையும் அதிகரித்து வருகின்றது. இனிவரும் நாட்களில் துரோகிகளையும் கைக்கூலிகளையும் மக்கள் இயல்பாகவே கண்காணிப்பில் வைத்துக் கொள்வர். அண்மைக் காலங்களில் ஆங்காங்கு மக்களே தனியாகவும் குழுக்களாகவும், கூடவே செய்தி ஊடகங்களும் இந்த சக்திகளை நேரடியாகவும் மறைவாகவும் அம்பலப்படுத்தத் தொடங்கி விட்டார்கள்.

தொடர்ச்சியான இருபது வருட அடக்குமுறைச் சட்டங்கள், போரின் கொடுமைகள் மற்றும் பொருளாதாரத் தடைகள் பல்வேறு இழப்புகளால் அன்றாடம் அல்லலுறும் மக்களில் கணிசமான பகுதியினர் அரசின் முகவர்களான இப் பிரகிருதிகளை அவ்வப்போது நாடிச்செல்வதுண்டு. இவ்வாறு மக்கள் வந்து போவதை இவர்கள் புள்ளிவிவரமிட்டு, தமக்கு நிறையவே ஆதரவு இருப்பதாக தேசத்தின் எதிரிகளை மகிழ்விப்பதுண்டு. சமயத்தில் இந்த விவரங்களைத் தமது கைக்கூலி நோக்கங்களுக்கும் பயன்படுத்திக் கொள்கின்றனர். இதில் பரிதாபம் யாதெனில், தாம் ஏமாற்றி விடலாம் என நினைப்பது தமது சொந்த மக்களைத்தான் என்பதை இவர்கள் மறந்துவிடுகின்றனர்.

கைக்கூலிகளின் சகல தீச்செயல்களையும் பதிவில் வைத்திருக்கும் மக்கள், தமக்கான நேரம் வரும்போது இவர்களை கூண்டுகளில் ஏற்றுவர்.

– விஜி

## எது பயங்கர.. (1ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்டிருந்தவர்கள். நமது மக்கள் மீது இழைக்கப்பட்டுவரும் கொடும்பாதகங்களை கண்டும் காணாது இருப்பவர்கள். இவர்கள் நமது விடுதலைப்போராட்டத்தை பயங்கரவாதம் என்கின்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என இன்று குற்றஞ்சாட்டிடும் இவர்கள், நமது தேசம் ஆயுதத்தை கையிலெடுப்பதற்கு மூலகாரணமாயிருந்து வரும் சிங்கள இனவெறிப் பயங்கரவாதம் பற்றி ஊமைகளாயிருக்கிறார்கள்.

நம் சின்னஞ்சிறு தேசம், சுற்றிலும் எதிரிகள் சூழ அரைநூற்றாண்டுகளாக தன் உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றது. நம் தேசம் தனது நியாயமான உரிமைகளைக் கேட்டு, மன்றாடியது, கோரிக்கை வைத்தது. உண்ணாதிருந்து பார்த்தது, உலகெங்கும் தன் கோரிக்கையை எடுத்தியம்பியது. ஏகாதிபத்தியங்களும் பிராந்திய ஆதிக்கங்களும் என்னதான் செய்து கொண்டிருந்தன? திருட்டு மௌனம் சாதித்தன. அத்துடன் நிற்கவில்லை, எம்முடன் நிற்பதாகக் காட்டிக்கொண்டு எமக்குக்குழிபறித்தன. பலவீனமான தேசம் தன்னிடம் எஞ்சியிருந்த சக்தியைத் திரட்டி இவற்றைத் தட்டிக் கேட்டது. தட்டிக்கேட்ட வழிமுறை பற்றி அழுத்தம் கொடுக்கின்றவர்கள் அவ்வாறான நிலைமை தோன்றுவதற்கான மூல காரணத்தை வேண்டுமென்றே விட்டுவிட்டார்கள். காரணம் இதற்கெல்லாம் உண்மையான குற்றவாளிகள், சூத்திரதாரிகள் இவர்களே.

இனவெறிக் கொடுமைகளுக்கு முடிவுகட்ட, பிராந்திய ஆதிக்கத்தின் பெருவெறியை முறியடிக்க, ஏகாதிபத்திய சக்திகளின் இரகசிய கொள்ளைகளைத் தடுத்துநிறுத்த நம்முன்னுள்ள ஒரேவழி நம் சக்திகளனைத்தையும் திரட்டிப் போராடுவதே. மக்கள் யுத்தத்தை நோக்கி முன்னேறுவதே.

நமது போராட்டத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நோக்குடன், பல்வேறு சதித்திட்டங்களினதும் மூலம் நமது போராட்டத்தின் பண்பை சிதைத்திட முயன்றவர்கள்... நமது போராட்டத்தின் நியயாத்தன்மையை தமது வெள்ளைப் பயங்கரத்திற்கு கீழ்ப்படித்திவிட இந்த ஆதிக்க சக்திகள் முயல்கின்றனர். நமது பக்க தவறுகளை நமது மக்கள் தமது போராட்ட பங்கேற்பின் மூலம் இனங்கண்டு திருத்திச் செல்வார்கள். இவற்றையே ஒரு கோலாக பாவித்து ஆதிக்க சக்திகள் நமது போராட்டத்தை நசுக்கியழிக்க முயல்வது தேசங்களின் சுயநிணர்யத்திற்கு எதிரான பயங்கரவாதமாகும்.

ஆபிரிக்காவைச் சுடுகாடாக்கி, மத்திய அமெரிக்காவை இரத்தக் களரியாக்கி, கிழக்காசிய நாடுகளைச் சிதறடித்து, இன்று தென்னாசியாவில் கால் பதித்துள்ள ஏகாதிபத்தியம், தமது நலன்களை இப்பிராந்தியமெங்கும் பாதுகாத்துக் கொள்ளவே இத்தனை பிரயத்தனங்களையும் எடுத்துக் கொள்கிறது. சிறிலங்காவின் இறைமையை பாதுகாக்க வரிந்து கட்டி நிற்பதாகக் காட்டிக்கொள்வதன் மூலம், தமது கழுத்துக்களில் சுமத்தப்பட்டுள்ள ஏகாதிபத்திய அடிமைவிலங்கை சிங்கள மக்கள் உணரவிடாது திசைதிருப்புகிறது.

ஒட்டுமொத்தமாக பார்ப்போம் எனின், சுயநிர்ணயம் கொண்டதாக ஒரு தேசம் நின்று நிலைப்பது ஏகாதிபத்திய, நவகொலனித்துவ ஆதிக்கத்திற்கு எதிரானது. இன்றைய உலக ஒழுங்கில் அனேகமான அரசுகள் ஏகாதிபத்தியத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. இத்தகைய நிலைமையில், அண்மைக் காலத்தில் எரித்திரியாவிற்கு பின்னர் ஒரு புதிய அரசு தோன்றுவது அதிலும் தென்னாசியப் பிராந்தியத்தில் தோன்றுவது ஏகாதிபத்திய நலன்களால் சகிக்க முடியாததாக உள்ளது. இந்தவகையில், உண்மையான சுதந்திரம், உண்மையான சுயநிர்ணயத்திற்காக வேட்கை கொண்டுள்ள நமது விடுதலைப் போராட்டம் அதனளவில் ஏகாதிப்பத்திய எதிர்ப்புப் போராட்டமே. இதை நம்மைவிட நமது எதிரிகள் உணர்ந்திருப்பதானாலேயே நமது போராட்டத்தை தடைசெய்வதில் தமக்கிடையே இத்தனை ஒருங்கிசைவையும் குரூர தீவிரத்தையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

> மக்கள் யுத்தத்தினால் ஏகாதிபத்திய - பிராந்திய ஆதிக்க பயங்கரத்தை தமிழீழ மண்ணில் முறியடிப்போம்!

## சமாதான... (4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பெரிய வெள்ளிக்கிழமை ஒப்பந்தத்தின் பண்பையும் காண்போம். பிரிட்டிஷ் அரசானது, அயர்லாந்து தேசத்தை துண்டாடி, தொடர்ச்சியான அழித்தொழிப்பு நடவடிக்கைகளை அயர்லாந்தில் மேற்கொண்டுவந்ததன் மூலம் போராட்டத்தை நசுக்கி, போராட்டம் பலவீனமுற்றிருந்த நிலையில் இவ்வொப்பந்தத்தை ஏற்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1998 (ஏப்ரல் 10) பெரிய வெள்ளிக் கிழமையன்று கைச்சாத்திடப்பட்ட இந்த ஒப்பந்தத்திற்கான முன்வரைபை இங்கிலாந்து, அயர்லாந்து அரசாங்க பிரதிநிதிகளும், அமெரிக்க செனட்டர் ஒருவரின் தலைமையிலான குழுவொன்றும் இணைந்து உருவாக்கியுள்ளனர்(3).

பெரிய வெள்ளி ஒப்பந்தமானது, அயர்லாந்து பிரச்சனையின் முக்கிய அம்சமான, துண்டாடப்பட்டுள்ள வட மற்றும் தென் அயர்லாந்து ஆகியவற்றை இணைப்பதற்கு காத்திரமான சரத்துகளை உருவாக்கவில்லை. மாறாக பிரித்தானியாவால் மேற்கொள்ளப்பட்ட தேசிய துண்டாடலை இவ்வொப்பந்தம் பாதுகாக்கிறது. அயர்லாந்து விடுதலைப் போராட்ட அமைப்பான ஐ.ஆர்.ஏ. தனது ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்பதும் ஒப்பந்தத்தின் ஒரு நிபந்தனையாகும். சாராம்சத்தில் இவ்வொப்பந்தமானது அயர்லாந்து விடுதலை போராட்டத்தை சிதைத்து, அயர்லாந்தின் இறைமையை நிரந்தரமாக துண்டாடுவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளது எனலாம்.

போராட்ட தரப்பினரைக் குற்றவாளிகள் போல் அணுகும், அவர்களது சுதந்திரத்தைக் கட்டிப்போடும் இந்த சர்வதேச ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் இறுதியாய்வில் அடக்குமுறையாளர்களுக்கும் ஏகாதிபத்தியங்களுக்குமே சாதகமாய் அமைகின்றன.

ஏகாதிபத்தியம் என்பது அதன் பொருள்வகை நலன்களுடன் பிணைந்துள்ளது. மத்திய கிழக்கில் எண்ணெய் வளம், அயர்லாந்தில் விலங்குவேளாண்மை உட்பட முதலீடுகள்... தற்பொழுது தமிழீழத்திலும் தனது நலன்களை ஸ்தாபித்துக்கொள்ள இவர்கள் முனைந்துள்ளனர். தென் கிழக்காசியாவின் மனிதவளத்தை ஏகாதிபத்தியம் இன்று தனது பிரதான (உழைப்புச் சக்தி) முதலீடாக காண்கிறது. சிறிலங்காவில் தனது உழைப்புச் சுரண்டலை ஆரம்பித்துவிட்டுள்ள ஏகாதிபத்தியம் எவ்வாறு தமிழீழ மக்களின் உதிரத்தை மாத்திரம் உறிஞ்சாமல் விட்டுவைக்கும். அது மாத்திரமல்ல, நமது தமிழீழ பிரதேசம் - கடல் பிரதேசம் அடங்கலாக - மிகவும் பெறுமதியான கனிவளங்களைக் கொண்டதாகும். அதை கொள்ளையிடுவதற்கான ஒப்பந்தங்களும் ஏற்கனவே சிங்கள அரசுடன் நடந்தேறிவிட்டிருக்கும் நிலையில் ஏகாதிபத்தியங்கள் எவ்வாறு நம்மை சுதந்திரமாக வாழ அனுமதிக்கும்?

**- சுபத்திரா**


*உசாத்துணை:*

1. Israel's killing fields – Aijaz Ahmad (இணையம்)
2. Occupied Palastine or independent Israel – Osama Abu Irshraid (இணையம்)
3. அயர்லாந்தின் போராட்டம்... (எஸ்.வி.ராஜதுரை)


## மக்கள் களம்

தமிழீழம் பத்திரிகையில் வரும் கருத்துக்கள் பல இடங்களுக்கும் போவது காணாது. இதற்கு பத்திரிகை பகிரங்கமாக வராதது ஒரு காரணம் என நான் நினைக்கின்றேன். அதேசமயம் இப்படி இரகசியமாக வருவதில் ஒரு நன்மையும்இருக்கின்றது. இப்போது வெளிப்படையாக தமிழரின் போராட்டத்திற்கு எதிராக அந்நிய சக்திகள் ரொம்ப உள்ளோட்டம் ஓடுவதை காணக்கூடியதாக உள்ளது. துணிந்து கருத்துக்களை சொல்பவர்களை கொலைகள் செய்வது அடிக்கடி நடக்கின்றது. இந்த நிலையில் இப்படியாக இரகிசயமாக வருவதனால் நம்முடைய மக்களுக்கு சேர வேண்டிய சில முக்கியமான கருத்துக்களை ஒழிவு மறைவின்றி சொல்லக்கூடியதாகவும் உள்ளது என்றும் என்னுடைய மனசு கூறுகின்றது.

கதிரவன்
வவுனியா.

'The Editor'
BM Box 4002
London. WC IN
3XX
United Kingdom

www.thamileelam.org
info@thamileelam.org

# பன்முக அரசியல் பலத்தில் நம் இறைமையை உறுதிபடுத்துவோம்!

ஈழத் தமிழரான நாம் தீர்மானகரமான ஒரு அரசியல் கட்டத்திற்குள் காலடி வைத்திருக்கிறோம்.

பல்வேறு விடயங்களையும் ஒரே நேரத்தில் எதிர்கொள்ளும் கொந்தளிப்பான தருணத்தை நமது விடுதலைப்போராட்டம்எதிர்கொண்டுள்ளது. ஒருபுறம்சிங்கள அரசினதும்ஏகாதிபத்திய சக்திகளினதும் நலன்களிலிருந்து நம்மீது திணிக்கப்படும் அரசியல் பேச்சுவார்த்தை. மறுபுறம் சிங்கள அரசினால் தீவிரப்படுத்தப்பட்டு வரும் மூர்க்கமான யுத்த ஆக்கிரமிப்பு. இவற்றுடன், விடுதலைப் புலிகளை தடைசெய்யப்போவதான பிரித்தானிய அச்சுறுத்தல்.

ஒன்றுக் கொன்று முற்றிலும் எதிரெதிர் நிலைகளிலுள்ள அரசியல் பேச்சுவார்த்தை, யுத்தம் ஆகிய இவ்விரு வழிமுறைகளையும் ஒருங்கே எதிர்கொண்டு வெற்றிகொள்ள வேண்டிய சூழ்நிலை நம்முன் எழுந்துள்ளது.

சர்வதேச சமூகங்களின் மத்தியில் நமது தேசத்தின் நியாயத்தன்மையை அங்கீகரிக்கச் செய்யும் அரசியல்வழிமுறைகளை மேற்கொள்வதுடன், கொலைவெறிகொண்ட எதிரியின்பாரிய படையெடுப்பை நமது மண்ணில் முறியடித்திடவுமான அரசியல் இராணுவம் ஆகிய இரு தளங்களையும் உள்ளடக்கிய விரிவான போராட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்திடுவோம்.

ஒரு தேசம் எனும் வகையில் நமது அடுத்தகட்ட வெற்றிகரமான அரசியல் மற்றும் இராணுவ முன்னெடுப்புகளுக்கான புறக் காரணிகளை மதிப்பிட்டுக் கொள்வோம்.

சிறிலங்காவில் மோசமடைந்துவரும் பொருளாதார நிலைமை அரசாங்கத்திலும் பெரிதும் குழப்பங்களை தோற்றுவித்து வருகிறது. இவ்விடயத்தில், எதிர்க்கட்சி ஆளுங்கட்சியை எதிர்த்து மக்கள் கிளர்ச்சிக்கான முயற்சிகளை முன்னெடுத்து வருகிறது. சிங்கள அரசு தனது "நன்மதிப்புகளை" சர்வதேச அரங்கில் காப்பாற்றிக் கொள்வதற்காக எடுக்கும் சமாதான முயற்சிகளையும் கூட மூர்க்கமாக எதிர்த்திடும் சிங்கள தீவிர பாசிச அமைப்புகளின் செயற்பாடுகள் மென்மேலும் சிங்கள இனவெறியை உலகிற்கு அம்பலப்படுத்தி, ஒட்டுமொத்தத்தில் சர்வதேச சக்திகளின் அதிருப்திக்கு சிங்கள அரசை உள்ளாக்கி வருகிறது. இப்படியாக நமது எதிரி தன்னகத்தே அரசியல், பொருளாதார, இராணுவ காரணிகளின் வீழ்ச்சி நிலையிலிருந்து தான் நம்மீதான தீவிர ஆக்கிரமிப்புக்கு முனைந்துள்ளது.

மறுபுறம், தனது நீண்ட போராட்ட அனுபவங்களிலிருந்து கற்றுக் கொண்டிருக்கும் போராட்டத் தலைமையான விடுதலைப் புலிகள், தனது இராணுவ ரீதியான பலமான நிலையிலிருந்து சிங்கள அரசின் மீது தாம் நிறுவியுள்ள அரசியல் ஆளுமையின் மூலம் சர்வதேச அளவில் வெற்றிகரமான அரசியல் நிலைப்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். ஒரு இராணுவ இயக்கமாக அடையாளப்படுத்தப்பட்டு வந்த விடுதலைப் புலிகள் இன்று ஒரு அரசியல் ஆளுமை கொண்ட அமைப்பாகவும் - இதன் மூலம் நமது போராட்டம் ஒரு தேசத்தின் அரசியல் உரிமைசார் விடயமாக அணுகப்படுவது- அடையாளங் காணப்படுவதற்கான சூழல் உருவாகியுள்ளது.

இன்று நமது விடுதலைப் போராட்டத்தை அடிப்படையில் பலப்படுத்திடும் பன்முக அரசியல் வடிவம் அரங்கிற்கு வருகிறது. தேசத்தில் பரவலாக உருவாகிவரும் மாணவ சக்தியின் எழுச்சிகள், மக்கள் போராட்டங்கள் யாவும், போராட்டத்தை மக்கள் தாமே நேரடியாக தலைமைதாங்க தயாராவதை கட்டியங் கூறுகின்றன. தேசத்தை மறந்திருந்த அரசியல் சக்திகள் இன்று சர்வதேச அரங்கில் தேசத்தின் நலன் சார்ந்து நிலைப்பாடுகள் எடுப்பது சர்வதேச சக்திகளின் கவனத்தை நம் தேசம் சார்ந்து நேர்மறை அர்தத்தில் ஈர்த்திடும் சூழலை உருவாக்குகிறது.

இவையாவும், தேசத்தின் உள்ளார்ந்த அரசியல் ஆற்றல், நம் தேச இறைமை என்பதை தன்முழு வீரியத்துடனும் சர்வதேச அரசியல் அரங்கிற்கு கொண்டுவருவதன் அறிகுரியாகும்.

இன்று தேசத்தின் மாணவர் சக்தியின் பரவாலான எழுச்சியின் மூலம் அரங்கிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் அரசியல் பன்முகத் தன்மையை இன்றைய நிலையில் தேசத்தைப் பலப்படுத்துவதற்காகவும், அமையப் போகும் தமிழீழக் குடியரசினை பலப்படுத்துவதற்கான அடித்தளமிடும் அக்கறையுடனும் அனைத்து அரசியல் மற்றும் வெகுஜன சக்திகளும் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்வோம்.

தேசத்தின் திரட்சிபெற்ற அரசியல் பலத்தில் உயர்ந்தெழும் இறைமை முழக்கம் எந்த அரசியல் சக்தியாலும் தணிக்கப்பட முடியாததாகும். பன்முக அரசியல் பலத்தில் நம் இறைமையை வென்றுகொள்வோம்.

வட அமெரிக்கத் தொடர்புகட்கு:
300 Borough Dr.,
PO Box 47032
Scarborough,On.
M1P 4ZP
Canada

ஐரோப்பியத் தொடர்புகட்கு:
'The Editor'
BM BOX 6769
LONDON
WCI 3XX, U.K.
Tel: 07041372064

# சுயநிர்ணய எழுச்சிகளால் "சுதந்திரக்" கொண்டாட்டங்கள் முறியடிப்பு

**53** வது வருடகாலமாக நம்மை அடிமைப்படுத்திய நாளை, சுதந்திரமாக நமது மண்ணில் கொண்டாடிட சிறிலங்கா அரசு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டது. இந்த எண்ணம் அடுத்த கணமே நமது மக்களால் முற்றாக முறியடிக்கப்பட்டது. பொதுவில், நமது மக்களையும் சர்வதேச சமூகங்களையும் ஏமாற்ற சிறிலங்கா அரசு எடுக்கும் அத்தனை முயற்சிகளுக்கும் தற்போது நமது தேசம் பொருத்தமான பதிலடிகளை உடனுக்குடன் கொடுத்து வருவதன் ஒரு விளைவு இதுவாகும்.

பலவழிகளிலும் நமது மக்களைத் திரட்டி, நமது மண்ணில் சிங்கள சுதந்திர தினத்தை கொண்டாட அரசினால் அழைப்புகள் விடுக்கப்பட்டன. சுதந்திர கொண்டாட்டங்கள் எனும் பெயரில், அரச நிர்வாக யந்திரங்களின் பல்வேறு கூறுகளையும் கொண்டு (கச்சேரிகள், பாடசாலைகள். படைப்பிரிவுகள், பல்வேறு திணைக்களங்கள்...) நடைமுறைப்படுத்திட திட்டமிடப்பட்டது. அண்மைக்காலமாக, நமது மக்கள் மேற்கொண்டு வருகின்ற சுயநிர்ணய எழுச்சிகளையும் அவை பெற்றுத்தந்து கொண்டிருந்த அரசியல் வெற்றிகளையும் இதன் மூலம் மழுங்கடித்துவிட நினைத்தது. மூலை முடுக்கெங்கும் சுயநிர்ணயத்திற்கான எழச்சிப் போராட்டங்களை நடாத்திக்கொண்டிருக்கும் நமது மக்கள் சிறிலங்காவின் சுதந்திர தினத்தை நமது தேசத்தின் மீதான சுதந்திர மறுப்புத் தினம் என்பதை அவர்களுக்கு உணர்த்தினர்.

மிகவும் திட்டமிட்ட அடிப்படையிலும், தொடாச்சியாகவும் முன்னெடுக்கப்பட்டு வரும் சுயநிர்ணயத்திற்கான எழுச்சிகளை கண்டு கலங்கிய அரசு இதனை முறியடிக்க வன்முறை மற்றும் வன்முறைசாரா வழிமுறைகளை தொடர்ந்தும் பயன்படுத்துகின்றது. இம்முறை நமது மண்ணில் பெரும் எடுப்பில் சுதந்திரதினத்தைக் கொண்டாட எத்தனித்ததன் உண்மையான பின்னணி இதுவே.

நாமோ உன்னதமான, புதிய சுதந்திரத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றோம். அவர்களோ தாம் சுதந்திரமாக இருப்பதாகவும், அதனைக்கொண்டாடுவதாகவும் தம்மை ஏமாற்றிக்கொண்டு அனைத்து விதத்திலும் தமது சுதந்திரத்தை பறிகொடுத்துக் கொண்டிருக்கின்றனர். பிறரை அடக்கி ஆள நினைத்தோர், பிற சமூகங்களின் சுதந்திரத்தை பறிக்க நினைத்தோர் தமக்குத்தாமே கால்களில் அடிமைச்சங்கிலியை மாட்டிக்கொண்டனர். தமது சுதந்திரத்தையும் ஆளுமையையும் தொலைத்து விட்டு நிற்கின்றனர். மீளமுடியா அழிவிற்குள் தம்மை உட்படுத்திக் கொண்டனர். தாம் பறித்த குழிக்குள் தாமே வீழ்ந்து கிடக்கின்றனர். தமது இறைமையை தொலைத்தனர். தமது பொருளாதார சுயத்தைப் பறிகொடுத்தனர், தமது அரசியல் ஆளுமையை அந்நிய எஜமானர்களிடம் பறிகொடுத்து நிற்கின்றனர். ஆதிக்க அரசுகளுக்கும், இந்திய மேலதிக்க சக்திகளுக்கும், அனைத்துலக கொள்ளைக்கார வங்கிகளுக்கும், அந்நிய வணிக நிறுவனங்களுக்கும் முன்னே கைகட்டி நின்றபடி, "சுதந்திரத்தை" கொண்டாடுவதாக தம்மைத் தாமே ஏமாற்றுகின்றனர்.

அவர்கள் ஏமாறட்டும், நம்மைப்பொறுத்த வரையில், அடக்குமுறையின் எச்சசொச்சங்களை எந்தவொரு நுண்ணிய வடிவிலும், குறியீட்டு வடிவிலும் எதிரிகள் மேற்கொண்டாலும், அதனை அடையாளம் கண்டு நிராகரிப்போம். இந்தப் போக்கு தற்போது நம் தேசத்தினுள் வெகுவேகமாகவே பற்றிக்கொண்டு வருகின்றது. இதுவே எதிரிகளை இன்று அச்சுறுத்தும் பிரதான விடயமாகவும் உள்ளது. எனவே இன்னும் புதிய புதிய வடிவங்களில் அரசு தனது இலக்குகளை அடைவதற்கு என்ன விலைகளையும் கொடுக்கத் தயாராகும் என்பதை நாம் எதிர்பார்த்திருக்கவும் அவற்றை முறியடிக்கவும் வேண்டும்.